# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2199/25 - 2020 ඔක්තෝබර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.10.29

*2199/25 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாய்ந்தன்மை வாய்ந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 326 வது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 289 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, ஊவா மாகாணத்தின் ஆளுநரான ஏ. ஜே. எம். முஸம்மில் ஆகிய நான், பின்வரும் கட்டளைகளை இத்தால் பகிரங்கப்படுத்துகின்றேன்.*

**ஏ. ஜே. எம். முஸம்மில்,**
ஆளுநர்,
ஊவா மாகாணம்.

ஊவா மாகாண ஆளுநர் காரியாலயம்,
*2020, ஒற்றோபர் 29.*

**கட்டளைகள்**

*1.* இக்கட்டளைகள் 2020 மாநகர சபை வரவு செலவுத்திட்டங்களை தயார் செய்தல் மற்றும் தத்துவமுள்ளதாக்கும் கட்டளைகள் என்று அழைக்கப்படும். — சுருக்கப் பெயர்.

*2.* 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 211 ஆம் பிரிவு மற்றும் 214 ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய, முறையே அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத் திட்டத்தை வரைவு செய்தல், சபையின் அங்கீகாரத்திற்காகச் — கட்டளைகளின் நடவடிக்கை முறையை பின்பற்றல் வேண்டும் என்பது.

சமர்ப்பித்தல், வரவு செலவுத்திட்டப் பிரேரணைக்கான திருத்தங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் அங்கீகரிப்பதானது இக்கட்டளைகளினால் விதித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்.

வருமானம் மற்றும் செலவின மதிப்பீடு பற்றிய ஆரம்ப செயற்பாடுகள்.

3. அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தை வரைவு செய்வதற்குத் தேவையான வருமான மூலங்களை இனங்காணல், சபைக்கு உரித்தான சொத்துக்களை வழிப்படுத்தத் தேவையான செலவின ஏற்பாடுகளின் முன்மதிப்பீடு மற்றும் வேறு மீண்டெழும் செலவினம் பற்றிய அறிக்கைகளைத் தயார் செய்வதற்கான ஆரம்ப வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது பிரதம கணக்காளர் மற்றும் ஆணையாளரின் பணியாதல் வேண்டும்.

வருமானத்தை விதித்துரைக்கும் சபைப் பிரேரணைகளை நிறைவேற்றல் மற்றும் வருமானத்தை விதித்துரைக்கும் பிரேரணை பற்றிய அறிவித்தலை வெளியிடுதல்.

4. (1) ஆணையாளர் தவிசாளரிடம் வினவி, அடுத்த ஆண்டுக்காக சபைக்கு அறவிட்டுக் கொள்ள வேண்டிய மற்றும் அறவிட்டுக்கொள்ளத்தக்க வீதவரி, வரி, குத்தகை வருமானம் மற்றும் சபையினால் ஆற்றப்படுகின்ற சேவைகளுக்காக அறவிட்டுக்கொள்ள வேண்டிய கட்டணங்களை விதிப்பதற்கான பிரேரணைகளை வரைவு செய்து நிதி பற்றிய நிலையியற் குழுவின் அறிக்கையுடன் ஆராய்வதற்காக செத்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்படுகின்ற பொதுச் சபைக் கூட்டமொன்றின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) சபையினால் நிறைவேற்றப்பட்ட வீதவரி, வரி, வாடகை வருமானம் மற்றும் கட்டணங்களை விதிப்பது தொடர்பிலான பிரேரணை பற்றிய அறிவித்தலை, ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் வர்த்தமானப் பத்திரிக்கையில் வெளியிடுவது மாநகர முதல்வரின் பணியாதல் வேண்டும்.

அபிவிருத்திப் பிரேரணைகளைக் கோரல் மற்றும் முன்னுரிமைப் படுத்தல்.

5. (1) அடுத்த ஆண்டின் மூலதன செலவின மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்க எதிர்பார்க்கின்ற பிரேரணைகளை யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு பத்திரிகை மூலம் பிரசைகளுக்கு செய்யும் அறிவித்தலை பொதுச் சபைக் கூட்டமொன்றில் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் வெளியிடுவதற்கு மற்றும் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்படுகின்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்வது மாநகர முதல்வரின் பணியாதல் வேண்டும்.

(2) மேலே (1) பந்தியின் கீழ் மாநகர முதல்வருக்குக் கிடைத்துள்ள பிரேரணைகளிலிருந்து அமுல்படுத்துவதற்கு மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள பிரேரணைகளை மாத்திரம் தெரிவு செய்து ஒவ்வொரு பிரிவின் அடிப்படையில் பிரித்து அவற்றை முன்னுரிமைப்படுத்தி மாநகரமுதல்வரிடம் சமர்ப்பித்தல் மற்றும் நீக்கும் பிரேரணைகள் இருப்பின், அவ்வாறு நீக்குவதற்கு அடிப்படையாக அமையும் காரணங்களை சுட்டிக்காட்டி அது பற்றி உரிய தரப்பினர்களுக்கு அறிவிப்பது ஆணையாளரின் பணியாதல் வேண்டும்.

செலவின மதிப்பீட்டின் வரைவு.

6. அடுத்த ஆண்டுக்கான மூலதனச் செலவின பிரேரணைகளுடன் கடந்த மூன்று வருட காலப்பகுதிக்குள் தாங்கிக்கொள்ளப்பட்ட உண்மையான செலவினங்களின் அளவைக் கவனத்தில் கொண்டு பிரதம கணக்காளர் மாநகர முதல்வரை வினவி, ஆணையாளரினதும் இணக்கத்துடன் பங்கேற்பு வரவு செலவுத்திட்டம் பற்றிய சகல உபாயமுறைகளையும் பின்பற்றி அடுத்த ஆண்டுக்கான சபையின் மீண்டெழும் செலவினங்களையும் உள்ளடக்கியதாக அடுத்த ஆண்டுக்கான சபையின் செலவு மதிப்பீட்டை வரைவு செய்தல் வேண்டும்.

வருமானம் மற்றும் பெறுகைகளின் மதிப்பீடு.

7. பிரதம கணக்காளர், மாநகர முதல்வரை வினவி, ஆணையாளரின் இணக்கத்துடன், அடுத்த ஆண்டின் சபையின் உத்தேச வருமானம் மற்றும் பெறுகைகளின் மதிப்பீட்டு வரைவை தயார் செய்தல் வேண்டும்.

அடுத்த ஆண்டின் வருமானம் பற்றிய மதிப்பீடு மற்றும் உத்தேச செலவினம் பற்றிய விபரம்.

8. 7 ஆவது கட்டளை மற்றும் 6 ஆவது கட்டளையின் கீழ் வரைவு செய்யப்பட்டுள்ள முறையே அடுத்த ஆண்டுக்கான உத்தேச வருமான மதிப்பீடு மற்றும் உத்தேச செலவினம் பற்றிய விபரங்களை மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 211 ஆவது பிரிவு மற்றும் 212 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, ஒவ்வொரு வருடமும் ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்படுகின்ற சபைக் கூட்டமொன்றில் சமர்ப்பித்தல் மாநகர ஆணையாளரின் பணியாதல் வேண்டும்.

அடுத்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை இறுதி யாக ஆராய்தல் மற்றும் திருத்தங் களை சமர்ப்பிக் கும் நடைமுறை.

9. (1) ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர், மாநகர முதல்வரினால் உகந்தது என்று கருதப்படுகின்ற தினமொன்றில் அடுத்த ஆண்டுக்கான வரைவு வரவு செலவுத்திட்டத்தை இறுதியாக ஆராய்ந்து நிறைவேற்றிக் கொள்வதற்காக சபையின் சிறப்புக் கூட்டமொன்றில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) மாநகர முதல்வரினால் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்கு, சபையின் யாராவது உறுப்பினர் ஒருவர் திருத்தங்களைச் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், மேற்படி திருத்தங்கள்

தமது கையொப்பத்துடன் திருத்தத்திற்கு அடிப்படையாக அமைகின்ற காரணங்களுடன் மூன்று வேலை நாட்களுக்கு முன்னர் மாநகர செயலாளரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(3) (2) பந்தியின் கீழ் வரவு செலவுத்திட்டத்திற்கு திருத்தங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை எனின், அது பற்றி மாநகர முதல்வரினால் மேற்படி விசேட பொதுச் சபைக் கூட்டத்தின் போது அறிவித்தல் வேண்டும் என்பதுடன், வரவு செலவுத்திட்டத்திற்கான திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின், அவை கிடைக்கப்பெற்ற ஒழுங்குவரிசைக்கு அமைய அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் இறுதியாக ஆராயப்படுகின்ற கூட்டம் ஆரம்பமானவுடன், மேற்படி திருத்த பிரேரணைகளை ஒரு பிரதி வீதம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பெற்றுக் கொடுக்கச் செயற்படுவது மாநகர முதல்வரின் பணியாதல் வேண்டும்.

(4) (1) பந்தியின் கீழ் நடாத்தப்படுகின்ற சிறப்புப் பொதுச் சபைக் கூட்டத்தில், மாநகர முதல்வர் தமது வரவு செலவுத்திட்டம் பற்றிய கொள்கைப் பிரகடனத்தை சமர்ப்பித்த பின்னர் இக்கட்டளைகளில் இதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் தாம் தயார் செய்த வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பிரேரணையை பொதுச் சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) மாநகர முதல்வரினால் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மேற்படி பிரேரணை மற்றொரு உறுப்பினரினால் வழிமொழியப்படுதல் வேண்டும்.

(6) இதனை அடுத்து வரவு செலவுத்திட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்களின் ஒழுங்குவரிசைக்கு அமைய, குறித்த உறுப்பினர் அல்லது உறுப்பினர்களுக்கு மேற்படி திருத்தங்களை சபையில் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது மாநகர முதல்வரின் பணியாதல் வெண்டும் என்பதுடன், குறித்த திருத்தங்களை மற்றொரு உறுப்பினர் வழிமொழிந்தாலன்றி அது தொடர்பில் சபை எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளல் ஆகாது.

(7) யாராயினும் உறுப்பினர் ஒருவரின் பெயரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் திருத்தத்தை வேறு உறுப்பினர் ஒருவர் சபையில் சமர்ப்பித்தலாகாது என்பதுடன் மேற்படி திருத்தத்தை சபையில் சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் குறித்த திருத்தத்தை கொண்டுவந்த உறுப்பினர் சபையில் இல்லாத பட்சத்தில், மேற்படி திருத்தம் சபையில் சமர்ப்பிக்கப்படாததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டம் தொடர்பிலான திருத்தங்கள் அனைத்தும் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து, குறித்த வரவு செலவுத்திட்டத்திற்கு,-

(அ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் அனைத்துக்கும் தாம் இணங்குவதாயின், அது பற்றி அல்லது

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் ஒரு திருத்தத்திற்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திருத்தங்களுக்கு தாம் இணங்காத பட்சத்தில், அவ்வாறு தாம் இணங்காத திருத்தங்கள் யாவை என்பது மற்றும் அவ்வாறு இணங்காமைக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணங்கள் யாவை என்பதை,

எழுத்து மூலமான கூற்றொன்றின் மூலம் சபைக்கு அறிவிப்பது மாநகர முதல்வரின் பணியாதல் வேண்டும்.

(9) (8) ஆம் பந்தியின் கீழ் மாநகர முதல்வர் தமது அறிவித்தலை சபைக்கு அறிவிப்புச் செய்ததை அடுத்து 10 ஆவது கட்டளையின் ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

10. (1) இக்கட்டளையின் கீழ் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு பிரேரணையையும் நிறைவேற்றுவது தொடர்பில் சபை தீர்மானம் மேற்கொள்ளும் போது, அது தொடர்பிலான வாக்கெடுப்பு மற்றும் பெறுபேறுகளை பிரகடனம் செய்வதானது இதனகத்துக் குறித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அடுத்த ஆண்டின் வரவு செலவுத் திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் மற்றும் வேறு நிதிப் பிரேரணை களுக்கான வாக்கெடுப்பு மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்.

(2) யாதாயினுமொரு பிரேரணையை மாநகர முதல்வர் சபையில் சமர்ப்பித்த பின்னர் குறித்த பிரேரணை மற்றொரு உறுப்பினரினால் வழிமொழியப்பட்டாலேயன்றி, மேற்படி எந்தவொரு பிரேரணை தொடர்பிலும் சபையில் கலந்துரையாடப்படலாகாது என்பதுடன் மேற்படி பிரேரணை வழிமொழியப்பட்டுள்ள பட்சத்தில் அது தொடர்பில் விவாதத்திற்கு வாய்ப்பளிப்பது மாநகர முதல்வரின் பணியாதல் வேண்டும்.

(3) யாதாயினுமொரு பிரேரணை தொடர்பில் சபையின் விவாதம் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், அது பற்றி சபைக்கு அறிவித்தல் மற்றும் மேற்படி பிரேரணையை நிறைவேற்றல் தொடர்பான வாக்கெடுப்பை நடாத்துமாறு மாநகர செயலாளருக்கு கட்டளையிடுவது மாநகர முதல்வரின் பணியாதல் வேண்டும்.

(4) சபையில் சமர்ப்பிக்கப்பட்ட யாதாயினுமொரு பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், எதிராக வாக்களிக்கப்பட்டுள்ள, வாக்களிப்பிலிருந்து தவிர்ந்திருந்த மற்றும் வாக்களிப்பு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அவையில் இருக்காத உறுப்பினர்கள் யார் என்பது மற்றும் அன்றயை தினம் கூட்டத்திற்கு வருகைதந்திருந்த உறுப்பினர்கள் யார் என்பதை இனங்காணக்கூடியவாறு மேற்படி வாக்கெடுப்பின் பெறுபேறுகளை உள்ளடக்கிய குறிப்பை, மாநகர செயலாளர் மாநகர முதல்வரிடம் சமர்ப்பித்த பின்னர்,மேற்படி பெறுபேறினை மாநகர முதல்வர் சபைக்கு அறிவிப்புச் செய்தல் வேண்டும்.

(5) மேலே (3) ஆம் பந்தியிலுள்ளவாறு யாதாயினுமொரு பிரேரணை தொடர்பிலான வாக்கெடுப்பின் போது, மேற்படி பிரேரணைக்கு எதிராக வாக்களித்துள்ள ஒவ்வொரு உறுப்பினரினாலும், தாம் அவ்வாறு எதிராக வாக்களித்திருப்பது எக்காரணத்திற்காக என்பதை தெளிவுபடுத்தும் எழுத்துமூலமான அறிவிப்பு மேற்படி கூட்டம் நடாத்தப்பட்ட திகதி முதல் ஏழு நாட்கள் பூர்த்தியடைய முன்னர் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் பிரதி சகிதம் மாநகர செயலாளரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(6) மேலே (3) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கெடுப்புப் பெறுபேறு பற்றிய குறிப்பு மற்றும் (5) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலின் ஒவ்வொரு பிரதி வீதம் அது சம்பந்தமான கூட்ட அறிக்கையின் இறுதியில் இணைத்துவைத்திருப்பது மாநகர செயலாளரின் பணியாதல் வேண்டும்.

*யாதாயினுமொரு வரவு செலவுத் திட்டம் சபையினால் முதற் தடவையாக நிராகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பின்பற்றப்படல் வேண்டிய நடவடிக்கைமுறை.*

11. (1) யாதாயினுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் நிராகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில்,மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 215அ பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் மீண்டும் ஆராயும் பொருட்டு கூட்டப்படுகின்றதொரு கூட்டத்தில் நிறைவேற்றப்படுவதற்கான பிரேரணையை சபையில் சமர்ப்பிக்க மாநகர முதல்வர் செயற்படுதல் வேண்டும் என்பதுடன், மேற்படி பிரேரணை மற்றொரு உறுப்பினரினால் வழிமொழியப்படுதல் வேண்டும்.

(2) மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்கு இரண்டாம் மதிப்பீட்டுச் சந்தர்ப்பத்தின் போது, யாராயினுமொரு உறுப்பினர் அதற்கான திருத்தங்களை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், அதற்காக முதற்தடவை சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களுக்கு புறம்பான திருத்தங்கள் எதனையும் சமர்ப்பிக்க உரித்திருத்தலாகாது.

(3) இரண்டாம் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பிலும் 10 ஆவது கட்டளையின் நடவடிக்கைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

*சபையின் பதவிக் காலம் ஆரம்ப மான திகதி முதல் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம்.*

12. (1) யாதாயினுமொரு சபையின் பதவிக் காலம் ஆரம்பமான திகதி முதல் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைய முன்னரானதொரு தினத்தில், முதற் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் முதற் தடவையாக நிராகரிக்கப்பட்டதை அடுத்து, 11ஆவது கட்டளையின் கீழ் மீண்டும் ஆராய்வதற்காக சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும், மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத் திட்டத்தினை நிறைவேற்றுவதை சபை நிராகரித்திருப்பின், அவ்வாறு இரண்டாவது தடவையாக நிராகரிக்கப்படுகின்ற திகதி முதல் இரண்டு வாரங்கள் கடந்த உடன், மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை முறையாக சபையில் நிறைவேற்றியதாகக் கருதி செயற்படுவதற்கு மாநகர முதல்வருக்கு தத்துவமிருத்தல் வேண்டும்.

(2) மேற்படி தத்துவத்தின் கீழ் செயற்படுவதற்கு மாநகர முதல்வர் தீர்மானித்திருப்பதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி, உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் பிரதி சகிதம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எழுத்து மூலம் அறிவிப்புச் செய்தல் மற்றும் சபையின் அடுத்த கூட்டத்தின் போது அது பற்றி சபைக்கு அறிவிப்பதும் மாநகர முதல்வரின் பணியாதல் வேண்டும்.

*சபையின் பதவிக் காலம் ஆரம்பித்த திகதி முதல் இரண்டு வருடங்கள் கடந்த பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற வரவு செலவுத் திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம்.*

13. (1) யாதாயினுமொரு சபையின் பதவிக் காலம் ஆரம்பித்த திகதி முதல் இரண்டு வருடங்கள் கடந்த பின்னரான தினமொன்றில் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட யாதாயினுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் முதற் தடவையாக நிராகரிக்கப்பட்டதை அடுத்து, 11ஆவது கட்டளையின் கீழ் மீண்டும் ஆராய்வதற்காக சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும், மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதை சபை நிராகரித்திருப்பின், இக்கட்டளையில் இதனகத்து குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் இதன் போது ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) மேற்படி நிராகரிப்பதானது மேற்கொள்ளப்பட்டிருப்பது -

(அ) குறித்த வரவு செலவுத்திட்டத்திற்கு அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்கு எந்தவொரு திருத்தமும் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் நிலையில் ; அல்லது

(ஆ) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்கு சமர்பிக்கப்பட்ட திருத்தங்களுக்கு மாநகர முதல்வர் இணங்கியுள்ள சந்தர்ப்பத்தில்,

ஆக இருப்பின், இதன் (4) ஆம், (5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் நடவடிக்கைமுறைகளைப் பின்பற்றல் வேண்டும்.

(3) உறுப்பினர்களினால் மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் ஒரு திருத்தம் அல்லது சில திருத்தங்கள் தொடர்பில் மாநகர முதல்வர் இணக்கம் தெரிவிக்காத பட்சத்தில், சபையினால் மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது, நிராகரிக்கப்பட்டிருப்பின், இதன் போது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 215அ பிரிவின் உப பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான ஏதேனுமொரு வகையில் வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் நிராகரிக்கப்பட்டுள்ளதொரு சந்தர்ப்பத்தில் -

(அ) இக்கட்டளைகளில் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் கீழ் வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் தொடர்பிலான ஆரம்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா இல்லையா என்பது ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டதொரு அறிக்கை ;

(ஆ) வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் இறுதியாக ஆராயப்படுகின்ற சந்தர்ப்பத்திற்கு உறுப்பினர்களினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் மாநகர முதல்வர் இணக்கம் தெரிவிக்காத திருத்தங்களின் பிரதிகள் மற்றும் மாநகர முதல்வர் அவ்வாறு இணங்காமை தொடர்பில் சமர்ப்பித்துள்ள எழுத்து மூலமான கூற்றுக்களின் பிரதிகள் ;

(இ) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மற்றும் இரண்டாவது தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், 10ஆவது கட்டளையின் கீழ் உறுப்பினர்களினால் வாக்களிக்கப்பட்ட முறை குறித்துக் கொள்ளப்பட்ட ஆவணத்தின் ஒவ்வொரு பிரதி வீதம் ; மற்றும்

(ஈ) வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மற்றும் இரண்டாம் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எதிராக வாக்களித்துள்ள யாராயினுமொரு உறுப்பினரினால் 10(5) ஆம் கட்டளையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எழுத்து மூலமான அறிவிப்புக்களின் ஒவ்வொரு பிரதி வீதம்,

மாநகர முதல்வரினால், ஆணையாளரின் உறுதிப்படுத்தலுடன் கூடியதாக, முடிந்தளவு கூடிய விரைவில் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(5) மாநகர முதல்வரின் மேற்படி அறிக்கையைக் கவனத்தில் கொண்டு, வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதை சபை நிராகரித்துள்ளமை தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளரினால், மேற்படி அறிக்கை தமக்குக் கிடைக்கப் பெற்று மூன்று நாட்களுக்குள் தமது அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) (5) ஆம் பந்தியின் கீழ் உள்ளூராட்சி ஆணையாளரின் அறிக்கையின் அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளைக் கவனத்தில் கொண்டு மேற்படி அறிக்கை கிடைத்த திகதி முதல் ஏழு நாட்களுக்கும் குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முறையாக சபையில் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டமாகுமா, இல்லையா என்பதை, அதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்துகின்ற எழுத்து மூலமான கூற்றுடன் அமைச்சர் தீர்மானம் செய்யலாம் என்பதுடன், அமைச்சரின் தீர்மானமானது –

(அ) மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு, உள்ளூராட்சி ஆணையாளருக்கு, உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மற்றும் மாநகர செயலாளருக்கும் பிரதி சகிதம் உடனடியாக மாநகர முதல்வருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) மாநகர செயலாளரினால் கூடிய விரைவில் சபையின் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(7) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் தொடர்பில் அமைச்சரினால் மேலே (6) ஆம் பந்தியின் கீழ் –

(அ) முறையாக நிறைவேற்றப்பட்ட ஒன்றாகக் கருதப்படல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், வேறு முரணான ஏதேனுமொரு விடயம் இருந்தாலேயொழிய, குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் செல்லுபடியானதொன்றாக கருதப்படுதல் வேண்டும் என்பது மட்டுமன்றி குறித்த மாநகர முதல்வர் தொடர்ந்தும் தமது மாநகர முதல்வர் பதவியில் கடமையாற்ற முடியும் என்பதுடன், குறித்த தீர்மானத்தை மாநகர முதல்வர் சபையின் அடுத்துவரும் கூட்டத்தின் போது சபைக்கு அறிக்கையிடல் வேண்டும்.

(ஆ) நிராகரிக்கப்பட்டுள்ள ஒன்றாகக் கருதப்படல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு இரண்டாவது தடவையாக நிராகரிக்கப்பட்ட திகதி முதல் இரண்டு வார காலம் பூர்த்தியடைந்ததை அடுத்துவரும் தினத்தில் மாநகர முதல்வர் தமது மாநகர முதல்வர் பதவியிலிருந்து பதவி விலகியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) மேலே (3) ஆம் பந்தி மற்றும் (7) (ஆ) பந்தியின் கீழ் மாநகர முதல்வர் தமது மாநகர முதல்வர் பதவியிலிருந்து பதவி விலகியிருப்பதாகக் கருதப்படுகின்றதொரு சந்தர்ப்பத்தில், மேற்படி சபையின் மாநகர முதல்வரை தெரிவு செய்துகொள்வதற்காக 262 ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

அடுத்துவரும் மாநகர முதல்வர் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சமர்ப்பித்தல் வேண்டும் என்பது மற்றும் சபை கலைக்கப்பட்டதாகக் கருதப்படும் சந்தர்ப்பம்.

14. (1) 13 ஆம் கட்டளையின் கீழ் மாநகர முதல்வர் தமது மாநகர முதல்வர் பதவியிலிருந்து விலகியதாக கருத்தப்பட்டதை அடுத்து, 262 ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்படி மாநகர முதல்வர் பதவியின் வெற்றிடத்திற்கு நியமனம் செய்யப்பட்ட அடுத்துவரும் மாநகர முதல்வர் கூடிய விரைவில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை ஆராய்வதற்காக கூட்டப்படுகின்ற கூட்டத்தின் போது சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) மேலுள்ளவாறே, குறித்த ஆண்டை அடுத்து வரும் ஒவ்வொரு ஆண்டுக்குமான வரவு செலவுத்திட்டம் மற்றும் அவசியமாயின் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குச் செயற்படுவதும் அடுத்துவரும் மாநகர முதல்வரின் பணியாதல் வேண்டும்.

(3) அடுத்துவரும் மாநகர முதல்வரினால் வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்ட ஆவணம் சபையில் சமர்ப்பிக்கப்படும் போது, நிறைவேற்றும் போது மற்றும் நிராகரிக்கும் போது இந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், தேவையான மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) (3) பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அடுத்துவரும் மாநகர முதல்வரினால் நிறைவேற்றிக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற யாதாயினுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, அச்சந்தர்ப்பத்திலேயே நிராகரிக்கப்பட்ட பின்னர், மீண்டும் ஆராய்வதற்காக இரண்டாவது தடவை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் நிராகரிக்கப்பட்டிருப்பின், அவ்வாறு இரண்டாவது தடவையாக நிராகரிக்கப்பட்ட திகதி முதல் இரண்டு வாரங்கள் நிறைவடைந்ததை அடுத்துவரும் தினத்திலிருந்து சபை கலைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) மேலுள்ளவாறு சபை கலைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்டுள்ள போது, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாய்ந்தன்மைவாய்ந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுகளின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சர் அல்லது ஆளுநரினால் சபையின் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு விசேட ஆணையாளராக பதவி வகிக்கின்ற விசேட ஆணையாளர் ஒருவர் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

15. 14 ஆவது கட்டளையின் கீழ் சபை கலைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட பின்னர், அச்சபைக்கு நியமனம் செய்யப்பட்ட விசேட ஆணையாளரினால் அடுத்த ஆண்டுக்கான மற்றும் அதனை அடுத்து வரும் ஆண்டுகளுக்கான வரவு செலவுத்திட்டம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்தல் மற்றும் நிறைவேற்றுவது தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். சபை கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றல்.

16. (1) யாதாயினுமொரு சபையின் வரவு செலவுத்திட்டமானது குறித்த ஆண்டு ஆரம்பமாக முன்னர் நிறைவேற்றப்பட முடியாது போயினும், குறித்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வரை, 8ஆவது கட்டளையின் கீழ் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச வருமானம் பற்றிய மதிப்பீடு மற்றும் உத்தேச செலவினங்களுக்கான விபரத்தில் காணப்படுகின்ற மீண்டெழும் செலவினங்களுக்கான நிதியை செலவிடுவதில் அச்சபைக்கு தடையிருத்தல் ஆகாது. நிதி ஆண்டு ஆரம்பமாகும் வரை வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படாதுள்ள சந்தர்ப்பத்தில் நிதியை செலவிடுதல்.

(2) அவ்வாறாயினும், குறித்த ஆண்டின் வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கருதுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் வரை எந்தவொரு மூலதனச் செலவினத்துக்கும் நிதி செலவிடல் ஆகாது.

17. அவசியமானது என்று மாநகர முதல்வர் கருதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்து சபையில் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், இதன் போது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 214 பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் இக்கட்டளையின் 9 ஆவது கட்டளையிலிருந்து 15 ஆவது கட்டளை வரையான (மேற்படி இரு கட்டளைகளும் உள்ளடங்கலாக) ஏற்பாடுகள் தேவையான மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும். குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம்.

18. ஒரு சபையின் வரவு செலவுத்திட்டம் தொடர்பில் வேறு ஏதேனுமொரு கட்டளை அல்லது கட்டளைகளில் உள்ளடங்கும் ஏற்பாடுகள், இக்கட்டளைகளில் உள்ளடங்கும் ஏற்பாடுகளுக்கு முரணானதாக இருக்கும் பட்சத்தில், குறித்த ஏற்பாடுகளை மிகைத்து இக்கட்டளைகளின் ஏற்பாடுகள் மேலோங்கி இருத்தல் வேண்டும். வேறொரு விதியின் ஏற்பாடுகளை மிகைத்து இக்கட்டளைகள் மேலோங்கி இருக்கும் என்பது.

19. மேலுள்ள கட்டளைகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பில் - இடைக்கால ஏற்பாடுகள்.

(அ) இதில் 4(1) ஆம் கட்டளை, 5(1) ஆம் கட்டளை, 8 ஆம் கட்டளை ஆகிய கட்டளைகளுள் உள்ளடக்கப்பட்டுள்ள திகதிகள் ஏற்புடையதாகாது.

20. பதங்கள் தொடர்பில் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி இக்கட்டளைகளில்,- பொருள்கோடல்.

"அடுத்துவரும் மாநகர முதல்வர்" எனும் பதத்தினால், 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 215அ பிரிவின் உப கட்டளையின் ஏற்பாடுகள் அமுலுக்கு வருவதன் காரணமாக மாநகர முதல்வர் பதவி விலகியதாக கருதப்பட்டதன் பின்னர், 262 ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகாரசபை தேர்தல்கள் கட்டளைச் சடடத்தின் 66ஆ(2) பிரிவின் கீழ் அல்லது 66 எ பிரிவின் கீழ், வெற்றிடமாகியுள்ள மாநகர முதல்வர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட மாநகர முதல்வரும் ;

''அமைச்சர்'' எனும் பதத்தினால், மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அமைச்சர் கருதப்படுகின்றார் என்பதுடன், குறித்த மாகாணத்தின் மாகாண சபை கலைக்கப்பட்டுள்ளதொரு சந்தர்ப்பத்தில் அதில் குறித்த மாகாண ஆளுநரும் உள்ளடங்குதல் வேண்டும் ;

"மாநகர முதல்வர்" என்பதனால், 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 327 ஆம் பிரிவில் அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருட்கோடலும்;

''ஆணையாளர்'' என்பதனால், 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 327 ஆம் பிரிவில் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள பொருள்கோடலும்;

''செயலாளர்'' என்பதனால், சபையின் பொதுச் சபை அலுவல்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் வழிப்படுத்தும் திணைக்களம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அலுவலரும்;

''சபை'' என்பதனால், 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள ஒரு மாநகர சபையும்;

கருதப்படுதல் வேண்டும்.

21. இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுவதுடன், ஏதாவது ஒவ்வாமை ஏற்படின் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாதல் வேண்டும்.

---

## 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாய்ந்தன்மைவாய்ந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவு மற்றும் 255 ஆம் அத்தியாயமான 247 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 193 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, ஊவா மாகாணத்தின் ஆளுநரான ஏ.ஜே.எம். முஸம்மில்ஆகிய நான், பின்வரும் விதிகளை இத்தால் பகிரங்கப்படுத்துகின்றேன்.

**ஏ. ஜே. எம். முஸம்மில்,**
ஆளுநர்,
ஊவா மாகாணம்.

ஊவா மாகாண ஆளுநர் காரியாலயம்,
2020, ஒற்றோபர் 29.

### விதிகள்

சுருக்கப் பெயர்.

1. இந்த விதிகள் 2020 நகர சபை வரவு செலவுத்திட்டங்களை தயார் செய்தல் மற்றும் தத்துவமுள்ளதாக்கும் விதிகள் என்று அழைக்கப்படும்.

விதிகளின் நடவடிக்கை முறையை பின்பற்றல் வேண்டும் என்பது.

2. 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 178 ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய, அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை வரைவு செய்தல், சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல், வரவு செலவுத்திட்டப் பிரேரணைக்கான திருத்தங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் அங்கீகரிப்பது இவ்விதிகளினால் விதித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்.

நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழு.

3. (1) ஒவ்வொரு வருடமும் சனவரி மாதம் பொதுச் சபைக் கூட்டத்தின்போது, நகர சபைகள் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழுவுக்கான உறுப்பினர்களை நியமனம் செய்து கொள்ளல் வேண்டும் என்பதுடன், அதன் தவிசாளர் பதவியை, சபையின் தவிசாளர் வகித்தல் வேண்டும்.

(2) நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழுவினால் முன்னதாக ஆராய்ந்து பொதுச் சபைக்கூட்டத்திற்கு அறிக்கையிடும் வரை, பிரதேச சபையினால் இந்த விதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகின்ற எந்தவொரு விடயம் தொடர்பிலும் இறுதியாக நடவடிக்கை மேற்கொள்ளலாகாது.

வருமானம் மற்றும் செலவின

4. அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தை வரைவு செய்வதற்குத் தேவையான வருமான மூலங்களை இனங்காணல், சபைக்கு உரித்தான சொத்துக்களை வழிப்படுத்தத் தேவையான செலவின ஏற்பாடுகளின்

முன்மதிப்பீடு மற்றும் வேறு மீண்டெழும் செலவினம் பற்றிய அறிக்கைகளைத் தயார் செய்வதற்கான ஆரம்ப வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது கணக்காளர் மற்றும் செயலாளரின் பணியாதல் வேண்டும். மதிப்பீடு பற்றிய ஆரம்ப செயற்பாடுகள்.

5. (1) கணக்காளர், தவிசாளரிடம் வினவி, அடுத்த ஆண்டுக்காக சபைக்கு அறவிட்டுக் கொள்ள வேண்டிய மற்றும் அறவிட்டுக்கொள்ளத்தக்க வீதவரி, வரி, குத்தகை வருமானம் மற்றும் சபையினால் ஆற்றப்படுகின்ற சேவைகளுக்காக அறவிட்டுக்கொள்ள வேண்டிய கட்டணங்களை விதிப்பதற்கான பிரேரணைகளை வரைவு செய்து நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழுவின் அறிக்கையுடன் ஆராய்வதற்காக செத்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்படுகின்ற பொதுச் சபைக் கூட்டமொன்றின்போது சமர்ப்பித்தல் வேண்டும். வருமானத்தை விதித்துரைக்கும் சபைப் பிரேரணைகளை நிறைவேற்றல் மற்றும் வருமானத்தை விதித்துரைக்கும் பிரேரணை பற்றிய அறிவித்தலை வெளியிடுதல்.

(2) சபையினால் நிறைவேற்றப்பட்ட வீதவரி, வரி, வாடகை வருமானம் மற்றும் கட்டணங்களை விதிப்பது தொடர்பிலான பிரேரணை பற்றிய அறிவித்தலை, ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் வர்த்தமானப் பத்திரிக்கையில் வெளியிடுவது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

6. (1) அடுத்த ஆண்டின் மூலதன செலவின மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்க எதிர்பார்க்கின்ற பிரேரணைகளை யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு பத்திரிகை மூலம் பிரசைகளுக்கு செய்யும் அறிவித்தலை ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் வெளியிடுவதற்கு மற்றும் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்படுகின்ற பொதுச் சபைக் கூட்டமொன்றில் உறுப்பினர்களுக்கு அறிவிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்வது தவிசாளரின் பணியாதல் வேண்டும். அபிவிருத்திப் பிரேரணைகளைக் கோரல் மற்றும் முன்னுரிமைப் படுத்தல்.

(2) மேலே (1) ஆம் பந்தியின் கீழ் தவிசாளருக்குக் கிடைத்துள்ள பிரேரணைகளிலிருந்து அமுல்படுத்துவதற்கு நகர சபைகள் கட்டளைச் சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள பிரேரணைகளை மாத்திரம் தெரிவு செய்து ஒவ்வொரு பிரிவின் அடிப்படையில் பிரித்து அவற்றை முன்னுரிமைப்படுத்தி தவிசாளரிடம் சமர்ப்பித்தல் மற்றும் நீக்கும் பிரேரணைகள் இருப்பின், அவ்வாறு நீக்குவதற்கு அடிப்படையாக அமையும் காரணங்களை சுட்டிக்காட்டி அது பற்றி உரிய தரப்பினர்களுக்கு அறிவிப்பது செயலாளரின் பணியாதல் வேண்டும்.

7. அடுத்த ஆண்டுக்கான மூலதனச் செலவின பிரேரணைகளுடன் கடந்த மூன்று வருட காலப்பகுதிக்குள் தாங்கிக்கொள்ளப்பட்ட செலவினங்களின் அளவைக் கவனத்தில் கொண்டு கணக்காளரினால் தவிசாளரை வினவி பங்கேட்பு வரவு செலவுத்திட்டம் பற்றிய சகல உபாயமுறைகளையும் பின்பற்றி அடுத்த ஆண்டுக்கான சபையின் மீண்டெழும் செலவினங்களையும் உள்ளடக்கியதாக அடுத்த ஆண்டுக்கான சபையின் செலவின மதிப்பீட்டை வரைவு செய்தல் வேண்டும். செலவின மதிப்பீட்டின் வரைவு.

8. நகரசபைச் செயலாளரினால் தவிசாளரை வினவி அடுத்த ஆண்டின் சபை வருமானம் மற்றும் பெறுகைகளின் மதிப்பீட்டு வரைவு தயார் செய்யப்படல் வேண்டும். வருமானம் மற்றும் பெறுகைகளின் மதிப்பீடு.

9. 8 ஆவது விதி மற்றும் 7 ஆவது விதியின் கீழ் வரைவு செய்யப்பட்டுள்ள முறையே அடுத்த ஆண்டுக்கான உத்தேச செலவின மதிப்பீடு மற்றும் உத்தேச வருமானம் மற்றும் பெறுகைகளின் மதிப்பீடு தொடர்பான சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தவிசாளர் நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழுவிடம் சமர்ப்பித்தல் தவிசாளரின் பணியாதல் வேண்டும். வருமானம் மற்றும் செலவின மதிப்பீட்டுக்கு நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழுவின் சிபாரிசு.

10. (1) ஒவ்வொரு வருடமும் நவெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர், தவிசாளரினால் உகந்தது என்று கருதப்படுகின்ற தினமொன்றில் அடுத்த ஆண்டுக்கான வரைவு வரவு செலவுத்திட்டத்தை இறுதியாக ஆராய்ந்து நிறைவேற்றிக் கொள்வதற்காக சபையின் சாதாரண அல்லது சிறப்புக் கூட்டமொன்றில் சமர்ப்பித்தல் வேண்டும். அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தை இறுதியாக ஆராய்ந்து நிறைவேற்றல்.

(2) வரவு செலவுத்திட்டத்தை இறுதியாக ஆராய்ந்துபார்க்கும் மேற்படி கூட்டத் திகதிக்கு ஆகக் குறைந்தது ஏழு வேலை நாட்களுக்கு முன்னர், மேற்படி வரைவு வரவு செலவுத்திட்டத்தை–

(அ) மேற்படி கூட்டத்தின் ஒழுங்குப்பத்திரத்துடன் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கையளிப்பதற்கு;

மற்றும்

(ஆ) பரிசீலிப்பதற்காக பொது மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்பதற்கான அறிவித்தலை வர்த்தமானப் பத்திரிகையிலும், ஆகக் குறைந்தது இரண்டு பத்திரிகைகளிலும் மும்மொழிகளிலும் வெளியிடுதல்,

தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(3) இந்த விதியின் கீழ் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை ஆராய்வதற்காக நடாத்தப்படுகின்ற பொதுச்சபைக் கூட்டத்தின் போது, தவிசாளரினால் தமது வரவு செலவுத்திட்டம் பற்றிய கொள்கைப் பிரகடனம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இந்த விதிகளின் ஏற்பாடுகளின் கீழான வரைவு வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பிரேரணையை பொதுச் சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) தவிசாளரினால் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மேற்படி பிரேரணை மற்றொரு உறுப்பினரினால் வழிமொழியப்படுதல் வேண்டும்.

(5) தவிசாளரின் வரவு செலவுத்திட்டப் பிரேரணை வழிமொழியப்பட்டதை அடுத்து, வரவு செலவுத்திட்டத்தை ஆராய்வதானது இந்த விதிகளில் இதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

வரவு செலவுத் திட்டத்துக்கான திருத்தங்களை சபையில் சமர்ப்பித்தல்.

11. (1) தவிசாளரினால் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்கு, சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவரினால் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட முடியும் என்பதுடன் மேற்படி திருத்தங்களை தமது கையொப்பத்துடன் திருத்தங்களுக்கு அடிப்படையான காரணங்களுடன் மூன்று வேலை நாட்களுக்கு முன்னர் செயலாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(2) (1) ஆம் பந்தியின் கீழ் வரவு செலவுத்திட்டத்திற்குத் திருத்தங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை எனின், அது பற்றித் தவிசாளரினால் மேற்படி பொதுச் சபைக் கூட்டத்தின் போது அறிவிக்கப்படல் வேண்டும் என்பதுடன், வரவு செலவுத்திட்டத்திற்கு திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின், அவை கிடைக்கப்பெற்ற ஒழுங்குவரிசைக்கு அமைய அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் இறுதியாக ஆராயப்படுகின்ற கூட்டம் ஆரம்பமானவுடன், மேற்படி திருத்த பிரேரணைகளை ஒரு பிரதி வீதம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பெற்றுக் கொடுக்கச் செயற்படுவது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(3) தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டப் பிரேரணையை வேறு உறுப்பினர் ஒருவர் வழிமொழிந்த பின்னர் வரவு செலவுத்திட்டத்திற்குத் திருத்தங்களை சமர்ப்பித்துள்ள ஒழுங்குவரிசைக்கு அமைய, குறித்த உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் மேற்படி திருத்தங்களை சபையில் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(4) கிடைக்கப் பெற்ற ஒழுங்குவரிசைக்கு அமைய குறித்த உறுப்பினரினால் வரவு செலவுத்திட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்கள், சபையில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து மேற்படி திருத்தங்களை மற்றொரு உறுப்பினர் வழிமொழிந்தாலன்றி அது தொடர்பில் சபை எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளல் ஆகாது.

(5) யாராயினும் உறுப்பினர் ஒருவரின் பெயரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் திருத்தத்தை வேறு உறுப்பினர் ஒருவர் சபையில் சமர்ப்பித்தலாகாது என்பதுடன் மேற்படி திருத்தத்தை சபையில் சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் குறித்த திருத்தத்தை கொண்டுவந்த உறுப்பினர் சபையில் இல்லாத பட்சத்தில், மேற்படி திருத்தம் சபையில் சமர்ப்பிக்கப்படாததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டம் தொடர்பிலான திருத்தங்கள் அனைத்தும் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து -

(அ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் அனைத்துக்கும் தாம் இணங்குவதாயின், அது பற்றி ; அல்லது

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் ஒரு திருத்தத்திற்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திருத்தங்களுக்கு தாம் இணங்காத பட்சத்தில், அவ்வாறு தாம் இணங்காத திருத்தங்கள் யாவை என்பது மற்றும் அவ்வாறு இணங்காமைக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணங்கள் யாவை என்பதை,

எழுத்து மூலமான கூற்றொன்றின் மூலம் சபைக்கு அறிவிப்பது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(7) இதனை அடுத்து அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தை ஆராய்வதற்கு 12 ஆவது விதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

12. (1) இந்த விதியின் கீழ் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு பிரேரணையையும் நிறைவேற்றுவது தொடர்பில் சபை தீர்மானம் மேற்கொள்ளும் போது, அது தொடர்பிலான வாக்கெடுப்பு மற்றும் பெறுபேறுகளை பிரகடனம் செய்வதானது பின்வரும் நடவடிக்கைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

*வருமானத்தை விதித்துரைக்கும், வரவு செலவுத்திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத் திட்டத்திற்கான வாக்கெடுப்பு மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்.*

(2) யாதாயினுமொரு பிரேரணையை தவிசாளர் சபையில் சமர்ப்பித்த பின்னர் குறித்த பிரேரணை மற்றொரு உறுப்பினரினால் வழிமொழியப்பட்டாலேயன்றி, மேற்படி எந்தவொரு பிரேரணை தொடர்பிலும் சபையில் கலந்துரையாடப்படலாகாது என்பதுடன் மேற்படி பிரேரணை வழிமொழியப்பட்டுள்ள பட்சத்தில் அது தொடர்பில் விவாதத்திற்கு வாய்ப்பளிப்பது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(3) மேற்படி பிரேரணை தொடர்பில் சபையின் விவாதம் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், அது பற்றி சபைக்கு அறிவித்தல் மற்றும் மேற்படி பிரேரணையை நிறைவேற்றல் தொடர்பாக வாக்கெடுப்பை நடாத்துமாறு செயலாளருக்கு கட்டளையிடுவது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(4) சபையில் சமர்ப்பிக்கப்பட்ட யாதாயினுமொரு பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், எதிராக வாக்களிக்கப்பட்டுள்ள, வாக்களிப்பிலிருந்து தவிர்ந்திருந்த மற்றும் வாக்களிப்பு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அவையில் இருக்காத உறுப்பினர்கள் யார் என்பது மற்றும் அன்றைய தினம் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த உறுப்பினர்கள் யார் என்பதை இனங்காணக்கூடியவாறு மேற்படி வாக்கெடுப்பின் பெறுபேறுகளை உள்ளடக்கிய குறிப்பை, செயலாளர் தவிசாளரிடம் சமர்ப்பித்ததை அடுத்து, தவிசாளர் மேற்படி பெறுபேறை சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) மேலே (3) ஆம் பந்தியிலுள்ளவாறு யாதாயினுமொரு பிரேரணை தொடர்பிலான வாக்கெடுப்பின்போது, மேற்படி பிரேரணைக்கு எதிராக வாக்களித்துள்ள ஒவ்வொரு உறுப்பினரினாலும், தாம் அவ்வாறு எதிராக வாக்களித்திருப்பது எக்காரணத்திற்காக என்பதை தெளிவுபடுத்தும் எழுத்துமூலமான அறிவிப்பு மேற்படி கூட்டம் நடாத்தப்பட்ட திகதி முதல் ஏழு நாட்கள் பூர்த்தியடைய முன்னர் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் பிரதி சகிதம் செயலாளரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(6) மேலே (4) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கெடுப்புப் பெறுபேறு பற்றிய குறிப்பு மற்றும் (5) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலின் ஒவ்வொரு பிரதி வீதம் அது சம்பந்தமான கூட்ட அறிக்கையின் இறுதியில் இணைத்து வைத்திருப்பது செயலாளரின் பணியாதல் வேண்டும்.

13. (1) யாதாயினுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் நிராகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 178அ பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் மீண்டும் ஆராயும் பொருட்டு கூட்டப்படுகின்றதொரு கூட்டத்தில் நிறைவேற்றப்படுவதற்கான பிரேரணையை சபையில் சமர்ப்பிக்க தவிசாளர் செயற்படுதல் வேண்டும் என்பதுடன், மேற்படி பிரேரணை மற்றொரு உறுப்பினரினால் வழிமொழியப்படுதல் வேண்டும்.

*யாதாயினுமொரு வரவு செலவுத் திட்டம் சபையினால் முதற் தடவையாக நிராகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பின்பற்றப்படல் வேண்டிய நடவடிக்கைமுறை.*

(2) மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்கு இரண்டாம் மதிப்பீட்டுச் சந்தர்ப்பத்தின் போது, யாராயினுமோரு உறுப்பினர் அதற்கான திருத்தங்களை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், அதற்காக முதற்தடவை சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களுக்கு புறம்பான திருத்தங்கள் எதனையும் சமர்ப்பிக்க உரித்திருத்தலாகாது.

(3) இரண்டாம் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பலும் 12 ஆவது விதியின் நடவடிக்கைமுறைகளைப் பின்பற்றல் வேண்டும்.

14. (1) யாதாயினுமொரு சபையின் பதவிக் காலம் ஆரம்பமான திகதி முதல் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைய முன்னரானதொரு தினத்தில், முதற் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் முதற் தடவையாக நிராகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து, 13 ஆவது விதியின் கீழ் மீண்டும் ஆராய்வதற்காக சபையில் சமர்ப்பிக்கப்பட்ட

*சபையின் பதவிக் காலம் ஆரம்ப மான திகதி முதல் இரண்டு வருடங்கள்*

பூர்த்தியடைய முன்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம்.

பின்னரும், மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தினை நிறைவேற்றுவதை சபை நிராகரித்திருப்பின், அவ்வாறு இரண்டாவது தடவையாக நிராகரிக்கப்படுகின்ற திகதி முதல் இரண்டு வாரங்கள் கடந்த உடன், மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை முறையாக சபையில் நிறைவேற்றியதாகக் கருதி செயற்படுவதற்குத் தவிசாளருக்குத் தத்துவமிருத்தல் வேண்டும்.

(2) மேற்படி தத்துவத்தின் கீழ் செயற்படுவதற்கு தவிசாளர் தீர்மானித்திருப்பதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி, உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் பிரதி சகிதம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எழுத்து மூலம் அறிவித்தல் மற்றும் சபையின் அடுத்த கூட்டத்தின் போது அது பற்றி சபைக்கு அறிவிப்பதும் தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

சபையின் பதவிக் காலம் ஆரம்பித்த திகதி முதல் இரண்டு வருடங்கள் கடந்த பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற வரவு செலவுத் திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம்.

15. (1) யாதாயினுமொரு சபையின் பதவிக் காலம் ஆரம்பித்த திகதி முதல் இரண்டு வருடங்கள் கடந்த பின்னரான தினமொன்றில் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட யாதாயினுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் முதற் தடவையாக நிராகரிக்கப்பட்டதை அடுத்து, 13 ஆவது விதியின் கீழ் மீண்டும் ஆராய்வதற்காக சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும், மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதை சபை நிராகரித்திருப்பின், இந்த விதியில் இதனகத்து குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் இதன் போது ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) மேற்படி நிராகரிப்பதானது மேற்கொள்ளப்பட்டிருப்பது -

(அ) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்கு எந்தவொரு திருத்தமும் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் நிலையில்; அல்லது

(ஆ) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்கு சமர்ப்பிக்கபட்ட திருத்தங்களுக்கு தவிசாளர் இணங்கியுள்ள சந்தர்ப்பத்தில்,

ஆக இருப்பின், இதன் (4) ஆம், (5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் நடவடிக்கைமுறைகளைப் பின்பற்றல் வேண்டும் என்பதுடன் மேற்படி ஏற்பாடுகள் தத்துவமுள்ளதாதல் வேண்டும்.

(3) உறுப்பினர்களினால் மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் ஒரு திருத்தம் அல்லது சில திருத்தங்கள் தொடர்பில் தவிசாளர் இணக்கம் தெரிவிக்காத பட்சத்தில், சபையினால் மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது, நிராகரிக்கப்பட்டிருப்பின், இதன் போது நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 178அ ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான ஏதேனுமொரு வகையில் வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் நிராகரிக்கப்பட்டுள்ளதொரு சந்தர்ப்பத்தில் -

(அ) இந்த விதிகளில் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் கீழ் வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் தொடர்பிலான ஆரம்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா இல்லையா என்பது செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டதொரு அறிக்கை ;

(ஆ) வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் இறுதியாக ஆராயப்படுகின்ற சந்தர்ப்பத்திற்கு உறுப்பினர்களினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் தவிசாளர் இணக்கம் தெரிவிக்காத திருத்தங்களின் பிரதிகள் மற்றும் தவிசாளர் அவ்வாறு இணங்காமை தொடர்பில் சமர்ப்பித்துள்ள எழுத்து மூலமான கூற்றுக்களின் பிரதிகள் ;

(இ) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மற்றும் இரண்டாவது தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், 12 ஆவது விதியின் கீழ் உறுப்பினர்களினால் வாக்களிக்கப்பட்ட முறை, குறித்துக் கொள்ளப்பட்ட ஆவணத்தின் ஒவ்வொரு பிரதி வீதம் ; மற்றும்

(ஈ) வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சமர்ப்பிக்கப் பட்ட சந்தர்ப்பத்தில் மற்றும் இரண்டாம் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எதிராக

வாக்களித்துள்ள யாராயினுமொரு உறுப்பினரினால் 12(5) விதியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எழுத்து மூலமான அறிவிப்புக்களின் ஒவ்வொரு பிரதி வீதம்,

தவிசாளரினால் செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் கூடியதாக, முடிந்தளவு கூடிய விரைவில் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(5) தவிசாளரின் மேற்படி அறிக்கையைக் கவனத்தில் கொண்டு, வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதை சபை நிராகரித்துள்ளமை தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளரினால், மேற்படி அறிக்கை தமக்குக் கிடைக்கப் பெற்று மூன்று நாட்களுக்குள் தமது அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) (5) ஆம் பந்தியின் கீழ் உள்ளூராட்சி ஆணையாளரின் அறிக்கையின் அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளைக் கவனத்தில் கொண்டு மேற்படி அறிக்கை கிடைத்த திகதி முதல் ஏழு நாட்களுக்கும் குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முறையாக சபையில் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டமாகுமா, இல்லையா என்பதை, அதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்துகின்ற எழுத்து மூலமான கூற்றுடன் அமைச்சர் தீர்மானம் செய்யலாம் என்பதுடன், அமைச்சரின் தீர்மானமானது -

(அ) மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு, உள்ளூராட்சி ஆணையாளருக்கு, உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மற்றும் செயலாளருக்கும் பிரதி சகிதம் உடனடியாக தவிசாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) செயலாளரினால் கூடிய விரைவில் சபையின் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(7) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் தொடர்பில் அமைச்சரினால் மேலே (6) ஆம் பந்தியின் கீழ் -

(அ) முறையாக நிறைவேற்றப்பட்ட ஒன்றாகக் கருதப்படல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், வேறு முரணான ஏதேனுமொரு விடயம் இருந்தாலேயொழிய, குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் செல்லுபடியானதொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பது மட்டுமன்றி குறித்த தவிசாளர் தொடர்ந்தும் தமது தவிசாளர் பதவியில் கடமையாற்ற முடியும் என்பதுடன், குறித்த தீர்மானத்தை தவிசாளர் சபையின் அடுத்துவரும் கூட்டத்தின் போது சபைக்கு அறிக்கையிடல் வேண்டும்.

(ஆ) நிராகரிக்கப்பட்டுள்ள ஒன்றாகக் கருதப்படல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு இரண்டாவது தடவையாக நிராகரிக்கப்பட்ட திகதி முதல் இரண்டு வார காலம் பூர்த்தியடைந்ததை அடுத்து வரும் தினத்தில் தவிசாளர் தமது தவிசாளர் பதவியிலிருந்து பதவி விலகியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) மேலே (3) மற்றும் (7) (ஆ) ஆம் பந்தியின் கீழ் தவிசாளர் தமது தவிசாளர் பதவியிலிருந்து பதவி விலகியிருப்பதாகக் கருதப்படுகின்றதொரு சந்தர்ப்பத்தில், மேற்படி சபையின் தவிசாளரை தெரிவு செய்துகொள்வதற்காக (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

அடுத்துவரும் தவிசாளர் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தல் வேண்டும் என்பது மற்றும் சபை கலைக்கப்பட்டதாகக் கருதப்படும் சந்தர்ப்பம்.

16. (1) 15 ஆம் விதியின் கீழ் தவிசாளர் தமது தவிசாளர் பதவியிலிருந்து விலகியதாக கருதப்பட்டதை அடுத்து, 262 ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்படி தவிசாளர் பதவியின் வெற்றிடத்திற்கு நியமனம் செய்யப்பட்ட அடுத்துவரும் தவிசாளர் கூடிய விரைவில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை ஆராய்வதற்காக கூட்டப்படுகின்ற கூட்டத்தின் போது சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) மேலுள்ளவாறே, குறித்த ஆண்டை அடுத்து வரும் ஒவ்வொரு ஆண்டுக்குமான வரவு செலவுத்திட்டம் மற்றும் அவசியமாயின் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குச் செயற்படுவதும் அடுத்துவரும் தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(3) அடுத்துவரும் தவிசாளரினால் வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்ட ஆவணம் சபையில் சமர்ப்பிக்கப்படும் போது, நிறைவேற்றும் போது மற்றும் நிராகரிக்கும் போதும் இந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், தேவையான மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) (3) ஆம் பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் தவிசாளரினால் நிறைவேற்றிக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற யாதாயினுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, அச்சந்தர்ப்பத்திலேயே நிராகரிக்கப்பட்ட பின்னர், மீண்டும் ஆராய்வதற்காக இரண்டாவது தடவை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் நிராகரிக்கப்பட்டிருப்பின், அவ்வாறு இரண்டாவது தடவையாக நிராகரிக்கப்பட்ட திகதி முதல் இரண்டு வாரங்கள் நிறைவடைந்ததை அடுத்துவரும் தினத்திலிருந்து சபை கலைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) மேலுள்ளவாறு சபை கலைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்டுள்ள போது, 1989 இன் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மைவாய்ந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுகளின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சர் அல்லது ஆளுநரினால் சபையின் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு விசேட ஆணையாளராக பதவி வகிக்கின்ற விசேட ஆணையாளர் ஒருவர் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

*சபை கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றல்.*

17. 16 ஆவது விதியின் கீழ் சபை கலைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட பின்னர், அச்சபைக்கு நியமனம் செய்யப்பட்ட விசேட ஆணையாளரினால் அடுத்த ஆண்டுக்கான மற்றும் அதனை அடுத்து வரும் ஆண்டுகளுக்கான வரவு செலவுத்திட்டம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்தல் மற்றும் நிறைவேற்றுவது தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

*நிதி ஆண்டு ஆரம்பமாகும் வரை வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படாதுள்ள சந்தர்ப்பத்தில் நிதியை செலவிடுதல்.*

18. (1) யாதாயினுமொரு சபையின் வரவு செலவுத்திட்டமானது குறித்த ஆண்டு ஆரம்பமாக முன்னர் நிறைவேற்றப்பட முடியாது போயினும், குறித்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வரை, 10 ஆவது விதியின் கீழ் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச செலவினங்களுக்கான மதிப்பீட்டில் காணப்படுகின்ற மீண்டெழும் செலவினங்களுக்கான நிதியை செலவிடுவதில் தடையிருத்தல் ஆகாது.

(2) அவ்வாறாயினும், குறித்த ஆண்டின் வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கருதுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் வரை எந்தவொரு மூலதனச் செலவினத்துக்கும் நிதி செலவிடல் ஆகாது.

*குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம்.*

19. அவசியமானதெனத் தவிசாளர் கருதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்து சபையில் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், இதன் போது நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 178 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் இந்த விதிகளின் 7 ஆவது விதியிலிருந்து 17 ஆவது விதி வரையான (மேற்படி இரு விதிகளும் உள்ளடங்களாக) ஏற்பாடுகள் தேவையான மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

*நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் பொது மக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது.*

20. (1) சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வரவு செலவுத்திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தினதும் போதியளவு பிரதிகளின் எண்ணிக்கையை, சபையின் தலைமை அலுவலகம், ஒவ்வொரு உப அலுவலகம் மற்றும் ஒவ்வொரு பொது நூலகத்திலும், கட்டணம் செலுத்தாது பொது மக்கள் பரிசீலனைக்காக காட்சிப்படுத்துவதற்கும், சபையின் இணையத்தளம் பேணிவரப்படுமாயின் அதிலும் அவற்றின் பிரதிகளை தரவேற்றம் செய்வதற்கும் செயலாளர் செயற்படுதல் வேண்டும்.

(2) யாராயினும் ஆளொருவரினால் ஏதேனுமொரு ஆவணத்தின் முழுமையான பிரதி அல்லது அதன் ஒரு பகுதியின் பிரதி கோரப்படும் பட்சத்தில், குறித்த பிரதிபண்ணுவதற்கான கட்டணத்தை அறவிட்டுக் கொண்டு பெற்றுக் கொடுக்கத் தேவையான வேலைத்திட்டத்தை ஏற்படுத்துவதற்கும் செயலாளர் செயற்படுதல் வேண்டும்.

*வேறொரு விதியின் ஏற்பாடுகளை மிகைத்து இந்த விதிகள் மேலோங்கி இருக்கும் என்பது.*

21. ஒரு சபையின் வரவு செலவுத்திட்டம் தொடர்பில் வேறு ஏதேனுமொரு விதி அல்லது விதிகளில் உள்ளடங்கும் ஏற்பாடுகள், இந்த விதிகளில் உள்ளடங்கும் ஏற்பாடுகளுக்கு முரணானதாக இருக்கும் பட்சத்தில், குறித்த ஏற்பாடுகளை மிகைத்து இந்த விதிகளின் ஏற்பாடுகள் மேலோங்கி இருத்தல் வேண்டும்.

22. மேலுள்ள விதிகள் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பில் - இடைக்கால ஏற்பாடுகள்.

(அ) இங்கு விதி 3,விதி 5(1) மற்றும் விதி 6(1) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதிகதிகள் ஏற்புடையதாகாது.

(ஆ) விதி 10(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள "நவெம்பர் 15க்கு முன்பாக "என்பதற்குபதிலாக" நவெம்பர் 30 க்கு முன்பாக" என்பதாகக் கொள்ளப்படவேண்டும்.

23. பதங்கள் தொடர்பில் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி இந்த விதிகளில்,- பொருட்கோடல்.

"அடுத்துவரும் தவிசாளர்" எனும் பதத்தினால், நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 178அ ஆம் பிரிவின் உப கட்டளையின் ஏற்பாடுகள் அமுலுக்கு வருவதன் காரணமாக தவிசாளர் பதவி விலகியதாக கருதப்பட்டதன் பின்னர், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபை தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ(2) ஆம் பிரிவின் கீழ் அல்லது 66 எ பிரிவின் கீழ், வேற்றிடமாகியுள்ள தவிசாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட தவிசாளரும் ;

''அமைச்சர்'' எனும் பதத்தினால், மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அமைச்சர் கருதப்படுகின்றார் என்பதுடன், குறித்த மாகாணத்தின் மாகாண சபை கலைக்கப்பட்டுள்ளதொரு சந்தர்ப்பத்தில் அதில் குறித்த மாகாண ஆளுநரும் உள்ளடங்குதல் வேண்டும் ;

''சபை'' என்பதனால், 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள ஒரு நகர சபையும் ;

"செயலாளர்" என்பதனால், 255 ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் சபையின் செயலாளராக நடவடிக்கை மேற்கொள்வதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆளொருவரும் ;

எனக் கருதப்படுதல் வேண்டும்.

24. இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுவதுடன், ஏதாவது பொருள் கோடலின் போது சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாதல் வேண்டும்.

---

## 1987 இன் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம்

1989 இன் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மை வாய்ந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் மற்றும் 223 ஆம் பிரிவுகள் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 184 ஆம் பிரிவுகளில் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, ஊவா மாகாணத்தின் ஆளுநரான ஏ. ஜே. எம். முஸம்மில் ஆகிய நான், பின்வரும் விதிகளை இத்தால் பகிரங்கப்படுத்துகின்றேன்.

**ஏ. ஜே. எம். முஸம்மில்,**
ஆளுநர்,
ஊவா மாகாணம்.

ஊவா மாகாண ஆளுநர் காரியாலயம்,
2020, ஒற்றோபர் 29.

## விதிகள்

*சுருக்கப் பெயர்.*

1. இந்த விதிகள் 2020 பிரதேச சபை வரவு செலவுத்திட்டங்களை தயார் செய்தல் மற்றும் தத்துவமுள்ளதாக்கும் விதிகள் என்று அழைக்கப்படும்

*விதிகளின் நடவடிக்கை முறையை பின்பற்றல் வேண்டும் என்பது.*

2. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய, அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை வரைவு செய்தல், சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல், வரவு செலவுத்திட்டப் பிரேரணைக்கான திருத்தங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் அங்கீகரிப்பது இவ்விதிகளினால் விதித்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழு.*

3. (1) ஒவ்வொரு வருடமும் சனவரி மாதம் பொதுச் சபைக் கூட்டத்தின் போது, பிரதேச சபைகள் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழுவுக்கான உறுப்பினர்களை நியமனம் செய்து கொள்ளல் வேண்டும் என்பதுடன், அதன் தவிசாளர் பதவியை, சபையின் தவிசாளர் வகித்தல் வேண்டும்.

(2) நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழுவினால் முன்னதாக ஆராய்ந்து பொதுச் சபைக்கூட்டத்திற்கு அறிக்கையிடும் வரை, பிரதேச சபையினால் இந்த விதிகளின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகின்ற எந்தவொரு விடயம் தொடர்பிலும் இறுதியாக நடவடிக்கை மேற்கொள்ளலாகாது.

*வருமானம் மற்றும் செலவின மதிப்பீடு பற்றிய ஆரம்ப செயற்பாடுகள்.*

4. அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தை வரைவு செய்வதற்குத் தேவையான வருமான மூலங்களை இனங்காணல், சபைக்கு உரித்தான சொத்துக்களை வழிப்படுத்தத் தேவையான செலவின ஏற்பாடுகளின் முன்மதிப்பீடு மற்றும் வேறு மீண்டெழும் செலவினம் பற்றிய அறிக்கைகளைத் தயார் செய்வதற்கான ஆரம்ப வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவது செயலாளரின் பணியாதல் வேண்டும்.

*வருமானத்தை விதித்துரைக்கும் சபைப் பிரேரணைகளை நிறைவேற்றல் மற்றும் வருமானத்தை விதித்துரைக்கும் பிரேரணை பற்றிய அறிவித்தலை வெளியிடுதல்.*

5. (1) செயலாளர் தவிசாளரிடம் வினவி, அடுத்த ஆண்டுக்காக சபைக்கு அறவிட்டுக் கொள்ள வேண்டிய மற்றும் அறவிட்டுக்கொள்ளத்தக்க வீதவரி, வரி, குத்தகை வருமானம் மற்றும் சபையினால் ஆற்றப்படுகின்ற சேவைகளுக்காக அறவிட்டுக்கொள்ள வேண்டிய கட்டணங்களை விதிப்பதற்கான பிரேரணைகளை வரைவு செய்து நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழுவின் அறிக்கையுடன் ஆராய்வதற்காக செத்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்படுகின்ற பொதுச் சபைக் கூட்டமொன்றின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) சபையினால் நிறைவேற்றப்பட்ட வீதவரி, வரி, வாடகை வருமானம் மற்றும் கட்டணங்களை விதிப்பது தொடர்பிலான பிரேரணை பற்றிய அறிவித்தலை, ஒவ்வொரு வருடமும் திசெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் வர்த்தமானப் பத்திரிக்கையில் வெளியிடுவது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

*அபிவிருத்திப் பிரேரணைகளைக் கோரல் மற்றும் முன்னுரிமைப் படுத்தல்.*

6. (1) அடுத்த ஆண்டின் மூலதன செலவின மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்க எதிர்பார்க்கின்ற பிரேரணைகளை யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு பத்திரிகை மூலம் பிரசைகளுக்கு செய்யும் அறிவித்தலை ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் வெளியிடுவதற்கு மற்றும் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்படுகின்ற பொதுச் சபைக் கூட்டமொன்றில் உறுப்பினர்களுக்கு அறிவிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்வது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(2) மேலே (1) ஆம் பந்தியின் கீழ் தவிசாளருக்குக் கிடைத்துள்ள பிரேரணைகளிலிருந்து அமுல்படுத்துவதற்கு பிரதேச சபை சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ள பிரேரணைகளை மாத்திரம் தெரிவு செய்து ஒவ்வொரு பிரிவின் அடிப்படையில் பிரித்து அவற்றை முன்னுரிமைப்படுத்தி தவிசாளரிடம் சமர்ப்பித்தல் மற்றும் நீக்கும் பிரேரணைகள் இருப்பின், அவ்வாறு நீக்குவதற்கு அடிப்படையாக அமையும் காரணங்களை சுட்டிக்காட்டி அது பற்றி உரிய தரப்பினர்களுக்கு அறிவிப்பது செயலாளரின் பணியாதல் வேண்டும்.

*செலவின மதிப்பீட்டின் வரைவு.*

7. அடுத்த ஆண்டுக்கான மூலதனச் செலவின பிரேரணைகளுடன் கடந்த மூன்று வருட காலப்பகுதிக்குள் தாங்கிக்கொள்ளப்பட்ட செலவினங்களின் அளவைக் கவனத்தில் கொண்டு செயலாளரினால் தவிசாளரை வினவி பங்கேற்பு வரவு செலவுத்திட்டம் பற்றிய சகல உபாயமுறைகளையும் பின்பற்றி அடுத்த ஆண்டுக்கான சபையின் மீண்டெழும் செலவினங்களையும் உள்ளடக்கியதாக அடுத்த ஆண்டுக்கான சபையின் செலவின மதிப்பீட்டை வரைவு செய்தல் வேண்டும்.

8. செயலாளரினால் தவிசாளரை வினவி அடுத்த ஆண்டின் சபை வருமானம் மற்றும் பெறுகைகளின் மதிப்பீட்டு வரைவு தயார் செய்யப்படல் வேண்டும்.

வருமானம் மற்றும் பெறுகைகளின் மதிப்பீடு.

9. 8 ஆவது விதி மற்றும் 7 ஆவது விதியின் கீழ் வரைவு செய்யப்பட்டுள்ள முறையே அடுத்த ஆண்டுக்கான உத்தேச செலவின மதிப்பீடு மற்றும் உத்தேச வருமானம் மற்றும் பெறுகைகளின் மதிப்பீடு தொடர்பான சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தவிசாளர் நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழுவிடம் சமர்ப்பித்தல் தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

வருமானம் மற்றும் செலவின மதிப்பீட்டுக்கு நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் பற்றிய குழுவின் சிபாரிசு.

10. (1) ஒவ்வொரு வருடமும் நவெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர், தவிசாளரினால் உகந்தது என்று கருதப்படுகின்ற தினமொன்றில் அடுத்த ஆண்டுக்கான வரைவு வரவு செலவுத்திட்டத்தை இறுதியாக ஆராய்ந்து நிறைவேற்றிக் கொள்வதற்காக சபையின் சாதாரண அல்லது சிறப்புக் கூட்டமொன்றில் சமர்ப்பித்தல் வேண்டும்.

அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தை இறுதியாக ஆராய்ந்து நிறைவேற்றல்.

(2) வரவு செலவுத்திட்டத்தை இறுதியாக ஆராய்ந்துபார்க்கும் மேற்படி கூட்டத்திகதிக்கு ஆகக் குறைந்தது ஏழு வேலை நாட்களுக்கு முன்னர், மேற்படி வரைவு வரவு செலவுத்திட்டத்தை–

(அ) மேற்படி கூட்டத்தின் ஒழுங்குப்பத்திரத்துடன் ஒவ்வொரு உறுப்பினருக்கும் கையளிப்பதற்கு; மற்றும்

(ஆ) பரிசீலிப்பதற்காக பொது மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்பதற்கான அறிவித்தலை வர்த்தமானப் பத்திரிகையிலும், ஆகக் குறைந்தது இரண்டு பத்திரிகைகளிலும் மும்மொழிகளிலும் வெளியிடுதல்,

தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(3) இந்த விதியின் கீழ் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை ஆராய்வதற்காக நடாத்தப்படுகின்ற பொதுச்சபைக் கூட்டத்தின் போது, தவிசாளரினால் தமது வரவு செலவுத்திடடம் பற்றிய கொள்கைப் பிரகடனம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இந்த விதிகளின் ஏற்பாடுகளின் கீழான வரைவு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பிரேரணையை பொதுச் சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) தவிசாளரினால் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மேற்படி பிரேரணை மற்றொரு உறுப்பினரினால் வழிமொழியப்படுதல் வேண்டும்.

(5) தவிசாளரின் வரவு செலவுத்திட்டப் பிரேரணை வழிமொழியப்பட்ட பின்னர், வரவு செலவுத்திட்ட்த்தை ஆராய்வதானது இந்த விதிகளில் இதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

11. (1) தவிசாளரினால் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்கு, சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவரினால் திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட முடியும் என்பதுடன் மேற்படி திருத்தங்களை தமது கைஒப்பத்துடன் திருத்தங்களுக்கு அடிப்படையான காரணங்களுடன் மூன்று வேலை நாட்களுக்கு முன்னர் செயலாளரிடம் கையளித்தல் வேண்டும்.

வரவு செலவுத் திட்டத்துக்கான திருத்தங்களை சபையில் சமர்ப்பித்தல்.

(2) (1) ஆம் பந்தியின் கீழ் வரவு செலவுத்திட்டத்திற்குத் திருத்தங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை எனின், அது பற்றித் தவிசாளரினால் மேற்படி பொதுச் சபைக் கூட்டத்தின் போது அறிவிக்கப்படல் வேண்டும் என்பதுடன், வரவு செலவுத்திட்டத்திற்கு திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின், அவை கிடைக்கப்பெற்ற ஒழுங்குவரிசைக்கு அமைய அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் இறுதியாக ஆராயப்படுகின்ற கூட்டம் ஆரம்பமானவுடன், மேற்படி திருத்த பிரேரணைகளை ஒரு பிரதி வீதம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பெற்றுக் கொடுக்கச் செயற்படுவது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(3) தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டப் பிரேரணையை வேறு உறுப்பினர் ஒருவர் வழிமொழிந்த பின்னர் வரவு செலவுத்திட்டத்திற்குத் திருத்தங்களை சமர்ப்பித்துள்ள ஒழுங்குவரிசைக்கு அமைய, குறித்த உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் மேற்படி திருத்தங்களை சபையில் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(4) கிடைக்கப் பெற்ற ஒழுங்குவரிசைக்கு அமைய குறித்த உறுப்பினரினால் வரவு செலவுத்திட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்கள், சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேற்படி திருத்தங்களை மற்றொரு

உறுப்பினர் வழிமொழிந்தாலன்றி அது தொடர்பில் சபை எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளல் ஆகாது.

(5) யாராயினும் உறுப்பினர் ஒருவரின் பெயரில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் திருத்தத்தை வேறு உறுப்பினர் ஒருவர் சபையில் சமர்ப்பித்தலாகாது என்பதுடன் மேற்படி திருத்தத்தை சபையில் சமர்ப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் குறித்த திருத்தத்தை கொண்டுவந்த உறுப்பினர் சபையில் இல்லாத பட்சத்தில், மேற்படி திருத்தம் சபையில் சமர்ப்பிக்கப்படாததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டம் தொடர்பிலான திருத்தங்கள் அனைத்தும் பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர்,-

(அ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் அனைத்துக்கும் தாம் இணங்குவதாயின், அது பற்றி அல்லது

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் ஒரு திருத்தத்திற்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திருத்தங்களுக்கு தாம் இணங்காத பட்சத்தில், அவ்வாறு தாம் இணங்காத திருத்தங்கள் யாவை என்பது மற்றும் அவ்வாறு இணங்காமைக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காரணங்கள் யாவை என்பதை,

எழுத்து மூலமான கூற்றொன்றின் மூலம் சபைக்கு அறிவிப்பது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(7) இதனை அடுத்து அடுத்த ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தை ஆராய்வதற்கு 12 ஆவது விதியின் ஏற்பாடுகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

வருமானத்தை விதித்துரைக்கும், வரவு செலவுத்திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத் திட்டத்திற்கான வாக்கெடுப்பு மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்.

12. (1) இந்த விதியின் கீழ் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு பிரேரணையையும் நிறைவேற்றுவது தொடர்பில் சபை தீர்மானம் மேற்கொள்ளும் போது, அது தொடர்பிலான வாக்கெடுப்பு மற்றும் பெறுபேறுகளை பிரகடனம் செய்வதானது பின்வரும் நடவடிக்கைமுறைக்கு அமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) யாதாயினுமொரு பிரேரணையை தவிசாளர் சபையில் சமர்ப்பித்த பின்னர் குறித்த பிரேரணை மற்றொரு உறுப்பினரினால் வழிமொழியப்பட்டாலேயன்றி, மேற்படி எந்தவொரு பிரேரணை தொடர்பிலும் சபையில் கலந்துரையாடப்படலாகாது என்பதுடன் றேம்படி பிரேரணை வழிமொழியப்பட்டுள்ள பட்சத்தில் அது தொடர்பில் விவாதத்திற்கு வாய்ப்பளிப்பது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(3) மேற்படி பிரேரணை தொடர்பில் சபையின் விவாதம் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், அது பற்றி சபைக்கு அறிவித்தல் மற்றும் மேற்படி பிரேரணையை நிறைவேற்றல் தொடர்பாக வாக்கெடுப்பை நடாத்துமாறு செயலாளருக்கு கட்டளையிடுவது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(4) சபையில் சமர்ப்பிக்கப்பட்ட யாதாயினுமொரு பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், எதிராக வாக்களிக்கப்பட்டுள்ள, வாக்களிப்பிலிருந்து தவிர்ந்திருந்த மற்றும் வாக்களிப்பு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அவையில் இருக்காத உறுப்பினர்கள் யார் என்பது மற்றும் அன்றயை தினம் கூட்டத்திற்கு வருகைதந்திருந்த உறுப்பினர்கள் யார் என்பதை இனங்காணக்கூடியவாறு மேற்படி வாக்கெடுப்பின் பெறுபேறுகளை உள்ளடக்கிய குறிப்பை, செயலாளர் தவிசாளரிடம் சமர்ப்பித்த பின்னர், தவிசாளர் மேற்படி பெறுபேறை சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) மேலே (3) ஆம் பந்தியிலுள்ளவாறு யாதாயினுமொரு பிரேரணை தொடர்பிலான வாக்கெடுப்பின் போது, மேற்படி பிரேரணைக்கு எதிராக வாக்களித்துள்ள ஒவ்வொரு உறுப்பினரினாலும், தாம் அவ்வாறு எதிராக வாக்களிப்பதிருப்பது எக்காரணத்திற்காக என்பதை தெளிவுபடுத்தும் எழுத்துமூலமான அறிவிப்பு மேற்படி கூட்டம் நடாத்தப்பட்ட திகதி முதல் ஏழு நாட்கள் பூர்த்தியடைய முன்னர் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் பிரதி சகிதம் செயலாளரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(6) மேலே (4) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்கெடுப்புப் பெறுபேறு பற்றிய குறிப்பு மற்றும் (5) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலின் ஒவ்வொரு பிரதி வீதம் அது சம்பந்தமான கூட்ட அறிக்கையின் இறுதியில் இணைத்துவைத்திருப்பது செயலாளரின் பணியாதல் வேண்டும்.

13\. (1) யாதாயினுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநரப்பு வரவு செலவுத்திடடத்தை நிறைவேற்றுவது சபையினால் நிராகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், பிரதேச சபைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் மீண்டும் ஆராயும் பொருட்டு கூட்டப்படுகின்றதொரு கூட்டத்தில் நிறைவேற்றப் படுவதற்கான பிரேரணையை சபையில் சமர்ப்பிக்க தவிசாளர் செயற்படுதல் வேண்டும் என்பதுடன், மேற்படி பிரேரணை மற்றொரு உறுப்பினரினால் வழிமொழியப்படுதல் வேண்டும். யாதாயினுமொரு வரவு செலவுத் திட்டம் சபையினால் முதற் தடவையாக நிராகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பின்பற்றப்படல் வேண்டிய நடவடிக்கைமுறை.

(2) மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்கு இரண்டாம் மதிப்பீட்டுச் சந்தர்ப்பத்தின் போது, யாராயினுமோரு உறுப்பினர் அதற்கான திருத்தங்களை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், அதற்காக முதற்தடவை சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களுக்கு புறம்பான திருத்தங்கள் எதனையும் சமர்ப்பிக்க உரித்திருத்தலாகாது.

(3) இரண்டாம் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பலும் 12 ஆவது விதியின் நடவடிக்கைமுறைகளைப் பின்பற்றல் வேண்டும்.

14\. (1) யாதாயினுமொரு சபையின் பதவிக் காலம் ஆரம்பமான திகதி முதல் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைய முன்னரானதொரு தினத்தில், முதற் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் முதற் தடவையாக நிராகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து, 13 ஆவது விதியின் கீழ் மீண்டும் ஆராய்வதற்காக சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும், மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தினை நிறைவேற்று வதை சபை நிராகரித்திருப்பின், அவ்வாறு இரண்டாவது தடவையாக நிராகரிக்கப்படுகின்ற திகதி முதல் இரண்டு வாரங்கள் கடந்த உடன், மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை முறையாக சபையில் நிறைவேற்றியதாகக் கருதி செயற்படுவதற்கு தவிசாளருக்கு தத்துவமிருத்தல் வேண்டும். சபையின் பதவிக் காலம் ஆரம்ப மான திகதி முதல் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம்.

(2) மேற்படி தத்துவத்தின் கீழ் செயற்படுவதற்கு தவிசாளர் தீர்மானித்திருப்பதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி, உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் பிரதி சகிதம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எழுத்து மூலம் அறிவித்தல் மற்றும் சபையின் அடுத்த கூட்டத்தின் போது அது பற்றி சபைக்கு அறிவிப்பதும் தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

15\. (1) யாதாயினுமொரு சபையின் பதவிக் காலம் ஆரம்பித்த திகதி முதல் இரண்டு வருடங்கள் கடந்த பின்னரான தினமொன்றில் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட யாதாயினுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் முதற் தடவையாக நிராகரிக்கப்பட்டதை அடுத்து, 13 ஆவது விதியின் கீழ் மீண்டும் ஆராய்வதற்காக சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும், மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதை சபை நிராகரித்திருப்பின், இந்த விதியில் இதனகத்து குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் இதன் போது ஏற்புடையதாதல் வேண்டும். சபையின் பதவிக் காலம் ஆரம்பித்த திகதி முதல் இரண்டு வருடங்கள் கடந்த பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற வரவு செலவுத் திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம்.

(2) மேற்படி நிராகரிப்பதானது மேற்கொள்ளப்பட்டிருப்பது -

(அ) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்கு எந்தவொரு திருத்தமும் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் நிலையில் அல்லது

(ஆ) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்கு சமர்ப்பிக்கபட்ட திருத்தங்களுக்கு தவிசாளர் இணங்கியுள்ள சந்தர்ப்பத்தில்,

ஆக இருப்பின், இதன் (4) ஆம், (5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகளின் நடவடிக்கைமுறைகளைப் பின்பற்றல் வேண்டும் என்பதுடன் மேற்படி ஏற்பாடுகள் தத்துவமுள்ளதாதல் வேண்டும்.

(3) உறுப்பினர்களினால் மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் ஒரு திருத்தம் அல்லது சில திருத்தங்கள் தொடர்பில் தவிசாளர் இணக்கம் தெரிவிக்காத பட்சத்தில், சபையினால் மேற்படி வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது, நிராகரிக்கப்பட்டிருப்பின், இதன் போது பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான ஏதேனுமொரு வகையில் வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது சபையினால் நிராகரிக்கப்பட்டுள்ளதொரு சந்தர்ப்பத்தில் -

(அ) இந்த விதிகளில் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் கீழ் வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் தொடர்பிலான ஆரம்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா இல்லையா என்பது செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டதொரு அறிக்கை ;

(ஆ) வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் இறுதியாக ஆராயப்படுகின்ற சந்தர்ப்பத்திற்கு உறுப்பினர்களினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்களில் தவிசாளர் இணக்கம் தெரிவிக்காத திருத்தங்களின் பிரதிகள் மற்றும் தவிசாளர் அவ்வாறு இணங்காமை தொடர்பில் சமர்ப்பித்துள்ள எழுத்து மூலமான கூற்றுக்களின் பிரதிகள்;

(இ) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மற்றும் இரண்டாவது தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், 12 ஆவது விதியின் கீழ் உறுப்பினர்களினால் வாக்களிக்கப்பட்ட முறை குறித்துக் கொள்ளப்பட்ட ஆவணத்தின் ஒவ்வொரு பிரதி வீதம் ; மற்றும்

(ஈ) வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மற்றும் இரண்டாம் தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எதிராக வாக்களித்துள்ள யாராயினுமொரு உறுப்பினரினால் 12(5) ஆம் விதியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எழுத்து மூலமான அறிவிப்புக்களின் ஒவ்வொரு பிரதி வீதம்,

தவிசாளரினால் செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் கூடியதாக, முடிந்தளவு கூடிய விரைவில் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(5) தவிசாளரின் மேற்படி அறிக்கையைக் கவனத்தில் கொண்டு, வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவதை சபை நிராகரித்துள்ளமை தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளரினால், மேற்படி அறிக்கை தமக்குக் கிடைக்கப் பெற்று மூன்று நாட்களுக்குள் தமது அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) (5) ஆம் பந்தியின் கீழ் உள்ளூராட்சி ஆணையாளரின் அறிக்கையின் அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளைக் கவனத்தில் கொண்டு மேற்படி அறிக்கை கிடைத்த திகதி முதல் ஏழு நாட்களுக்கும் குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முறையாக சபையில் நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டமாகுமா, இல்லையா என்பதை, அதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்துகின்ற எழுத்து மூலமான கூற்றுடன் அமைச்சர் தீர்மானம் செய்யலாம் என்பதுடன், அமைச்சரின் தீர்மானமானது -

(அ) மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு, உள்ளூராட்சி ஆணையாளருக்கு, உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மற்றும் செயலாளருக்கும் பிரதி சகிதம் உடனடியாக தவிசாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) செயலாளரினால் கூடிய விரைவில் சபையின் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(7) குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் தொடர்பில் அமைச்சரினால் மேலே (6) ஆம் பந்தியின் கீழ் -

(அ) முறையாக நிறைவேற்றப்பட்ட ஒன்றாகக் கருதப்படல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், வேறு முரணான ஏதேனுமொரு விடயம் இருந்தாலேயொழிய, குறித்த வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் செல்லுபடியானதொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பது மட்டுமன்றி குறித்த தவிசாளர் தொடர்ந்தும் தமது தவிசாளர் பதவியில் கடமையாற்ற முடியும் என்பதுடன், குறித்த தீர்மானத்தை தவிசாளர் சபையின் அடுத்துவரும் கூட்டத்தின் போது சபைக்கு அறிக்கையிடல் வேண்டும்.

(ஆ) நிராகரிக்கப்பட்டுள்ள ஒன்றாகக் கருதப்படல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு இரண்டாவது தடவையாக நிராகரிக்கப்பட்ட திகதி முதல் இரண்டு வார காலம் பூர்த்தியடைந்ததை அடுத்துவரும் தினத்தில் தவிசாளர் தமது தவிசாளர் பதவியிலிருந்து பதவி விலகியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) மேலே (3) மற்றும் (7) (ஆ) பந்தியின் கீழ் தவிசாளர் தமது தவிசாளர் பதவியிலிருந்து பதவி விலகியிருப்பதாகக் கருதப்படுகின்றதொரு சந்தர்ப்பத்தில், மேற்படி சபையின் தவிசாளரை தெரிவு செய்துகொள்வதற்காக 262 ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

16. (1) 15 ஆம் விதியின் கீழ் தவிசாளர் தமது தவிசாளர் பதவியிலிருந்து விலகியதாக கருதப்பட்டதை அடுத்து, 262 ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்படி தவிசாளர் பதவியின் வெற்றிடத்திற்கு நியமனம் செய்யப்பட்ட அடுத்துவரும் தவிசாளர் கூடிய விரைவில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை ஆராய்வதற்காக கூட்டப்படுகின்ற கூட்டத்தின் போது சபையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

*அடுத்துவரும் தவிசாளர் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தல் வேண்டும் என்பது மற்றும் சபை கலைக்கப்பட்டதாகக் கருதப்படும் சந்தர்ப்பம்.*

(2) மேலுள்ளவாறே, குறித்த ஆண்டை அடுத்து வரும் ஒவ்வொரு ஆண்டுக்குமான வரவு செலவுத்திட்டம் மற்றும் அவசியமாயின் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குச் செயற்படுவதும் அடுத்துவரும் தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

(3) அடுத்துவரும் தவிசாளரினால் வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்ட ஆவணம் சபையில் சமர்ப்பிக்கப்படும் போது, நிறைவேற்றும் போது மற்றும் நிராகரிக்கும் போது இந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள், தேவையான மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) (3) ஆம் பந்தியில் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் தவிசாளரினால் நிறைவேற்றிக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற யாதாயினுமொரு வரவு செலவுத்திட்டம் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் முதற் தடவையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, அச்சந்தர்ப்பத்திலேயே நிராகரிக்கப்பட்ட பின்னர், மீண்டும் ஆராய்வதற்காக இரண்டாவது தடவை சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் நிராகரிக்கப்பட்டிருப்பின், அவ்வாறு இரண்டாவது தடவையாக நிராகரிக்கப்பட்ட திகதி முதல் இரண்டு வாரங்கள் நிறைவடைந்ததை அடுத்துவரும் தினத்திலிருந்து சபை கலைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) மேலுள்ளவாறு சபை கலைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்டுள்ள போது, 1989 இன் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மைவாய்ந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுகளின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதத்துவங்களின் பயனைக் கொண்டு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சர் அல்லது ஆளுநரினால் சபையின் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு விசேட ஆணையாளராக பதவி வகிக்கின்ற விசேட ஆணையாளர் ஒருவர் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

17. 16 ஆவது விதியின் கீழ் சபை கலைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்பட்ட பின்னர், அச்சபைக்கு நியமனம் செய்யப்பட்ட விசேட ஆணையாளரினால் அடுத்த ஆண்டுக்கான மற்றும் அதனை அடுத்து வரும் ஆண்டுகளுக்கான வரவு செலவுத்திட்டம் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்தல் மற்றும் நிறைவேற்றுவது தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

*சபை கலைக்கப் பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றல்.*

18. (1) யாதாயினுமொரு சபையின் வரவு செலவுத்திட்டமானது குறித்த ஆண்டு ஆரம்பமாக முன்னர் நிறைவேற்றப்பட முடியாது போயினும், குறித்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வரை, 10 ஆவது விதியின் கீழ் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள உத்தேச செலவினங்களுக்கான மதிப்பீட்டில் காணப்படுகின்ற மீண்டெழும் செலவினங்களுக்கான நிதியை செலவிடுவதில் தடையிருத்தல் ஆகாது.

*நிதி ஆண்டு ஆரம்பமாகும் வரை வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படாதுள்ள சந்தர்ப்பத்தில் நிதியை செலவிடுதல்.*

(2) அவ்வாறாயினும், குறித்த ஆண்டின் வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கருதுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் வரை எந்தவொரு மூலதனச் செலவினத்துக்கும் நிதி செலவிடல் ஆகாது.

குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம்.

19. அவசியமானதெனத் தவிசாளர் கருதும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்து சபையில் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன், இதன் போது பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் இந்த விதிகளின் 7 ஆவது விதியிலிருந்து 17 ஆவது விதி வரையான (மேற்படி இரு விதிகளும் உள்ளடங்களாக) ஏற்பாடுகள் தேவையான மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

நிறைவேற்றப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டம் பொது மக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது.

20. (1) சபையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வரவு செலவுத்திட்டம் மற்றும் குறைநிரப்பு வரவு செலவுத்திட்டத்தினதும் போதியளவு பிரதிகளின் எண்ணிக்கையில் சபையில் தலைமை அலுவலகம், ஒவ்வொரு உப அலுவலகம் மற்றும் ஒவ்வொரு பொது நூலகத்திலும், கட்டணம் செலுத்தாது பொது மக்கள் பரிசீலனைக்காக காட்சிப்படுத்துவதற்கும், சபையின் இணையத்தளம் பேணிவரப்படுமாயின் அதிலும் அவற்றின் பிரதிகளை தரவேற்றம் செய்வதற்கும் செயலாளர் செயற்படுதல் வேண்டும்.

(2) யாராயினும் ஆளொருவரினால் ஏதேனுமொரு ஆவணத்தின் முழுமையான பிரதி அல்லது அதன் ஒரு பகுதியின் பிரதி கோரப்படும் பட்சத்தில், குறித்த பிரதிபண்ணுவதற்கான கட்டணத்தை அறவிட்டுக் கொண்டு பெற்றுக் கொடுக்கத் தேவையான வேலைத்திட்டத்தை ஏற்படுத்துவதற்கும் செயலாளர் செயற்படுதல் வேண்டும்.

வேறொரு விதியின் ஏற்பாடுகளை மிகைத்து இக்கட்டளைகள் மேலோங்கி இருக்கும் என்பது.

21. ஒரு சபையின் வரவு செலவுத்திட்டம் தொடர்பில் வேறு ஏதேனுமொரு விதி அல்லது விதிகளில் உள்ளடங்கும் ஏற்பாடுகள், இந்த விதிகளில் உள்ளடங்கும் ஏற்பாடுகளுக்கு முரணானதாக இருக்கும் பட்சத்தில், குறித்த ஏற்பாடுகளை மிகைத்து இந்த விதிகளின் ஏற்பாடுகள் மேலோங்கி இருத்தல் வேண்டும்.

இடைக்கால ஏற்பாடுகள்.

22. மேலுள்ள விதிகள் எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பில் -

(அ) இதில் 3 ஆம் விதி, 5(1) ஆம் விதி மற்றும் 6(1) ஆம் விதி ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் ஏற்புடையதாகாது.

(ஆ) 10(1) ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள "நவெம்பர் 15க்கு முன்பாக" என்பதற்கு பதிலாக "நவெம்பர் 30க்கு" முன்பாக என்பதாகக் கொள்ளப்படவேண்டும்.

பொருட்கோடல்.

23. பதங்கள் தொடர்பில் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி இந்த விதிகளில்,-

"அடுத்துவரும் தவிசாளர்" எனும் பதத்தினால், பிரதேச சபைகள் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் உப கட்டளையின் ஏற்பாடுகள் அமுலுக்குவருவதன் காரணமாக தவிசாளர் பதவி விலகியதாக கருதப்பட்டதன் பின்னர், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபை தேர்தல்கள் கட்டளைச் சடடத்தின் 66ஆ(2) பிரிவின் கீழ் அல்லது 66 எ ஆம் பிரிவின் கீழ், வேற்றிடமாகியுள்ள தவிசாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட தவிசாளரும் ;

"அமைச்சர்" எனும் பதத்தினால், மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அமைச்சர் கருதப்படுகின்றார் என்பதுடன், குறித்த மாகாணத்தின் மாகாண சபை கலைக்கப்பட்டுள்ளதொரு சந்தர்ப்பத்தில் அதில் குறித்த மாகாண ஆளுநரும் உள்ளடங்குதல் வேண்டும் ;

"சபை" என்பதனால், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் ஊவா மாகாணத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேச சபையும் ;

"செயலாளர்" என்பதனால், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் சபையின் செயலாளராக நடவடிக்கை மேற்கொள்வதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆளொருவரும் ;

எனக் கருதப்படுதல் வேண்டும்.

24. இவ் வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுவதுடன், ஏதாவது ஒவ்வாமை ஏற்படின் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.